# புலிகளுக்கு எதிரான ராணுவ தாக்குதல்களுக்கு சிறில் ரணதுங்கா பெரும் தடையாக இருந்தார்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொண்ட இராணுவநடவடிக்கைகளுக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்கா பெரும் தடையாக இருந்துள்ளார் என்று கொழும்பில் வெளியாகும் அரசு சார்புப் பத்திரிகை ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 17 இதழ் 43

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30 — 03 — 1993

## குமாரி நேற்று வரவில்லை கரைக்கு தகவலும் இல்லை!

(யாழ்ப்பாணம்)
குமாரி கப்பல் நேற்று மாலை வரை பருத்தித்துறைக்கோ அல்லது காங்கேசன்துறைக்கோ வந்து சேரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இருநாட்களுக்கு முன்பு கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களுடன் புறப்பட்ட மேற்படி கப்பலுக்கு என்ன நேர்ந்தது என்பது நேற்று மாலை வரை தெரியவில்லை என்று யாழ் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை பருத்தித்துறைதுறை முகத்துக்கு வந்து

(4-ம் பக்கம் பார்க்க)

# உதவி வழங்கும் நாடுகள் குழு இலங்கைக்கு அவசர விஜயம்!

(கொழும்பு)
இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளைச் சேர்ந்த குழு ஒன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ள தமது நாடுகளின் குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு வழங்கவுள்ள உதவிகள் குறித்து முடிவு செய்யுமுகமாக இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காகவே இவர்கள் இங்குவரவுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இலங்கைக்கான உதவிகள் குறித்து முடிவு செய்வதற்கு வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படாமை, மனித உரிமை மீறல் சம்பவங்கள், பத்திரிகையாளர்கள் மீதான அரசின் அழுத்தங்கள் ஆகிய வற்றை நேரில் கண்டு ஆராய வதே அவர்களது விஜயத்தின் முக்கிய நோக்கமாகுமென தெரிவிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தமிழர்கள் மீது படையினர்கெடுபிடி அதிகரிப்பு

(வவுனியா)
வவுனியாப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகளை சமீப காலமாக தீவிரப் படுத்தியுள்ளனர்.

வீடுவீடாகச் சென்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சோதனை செய்வதோடு பெருமளவு தமிழ் இளைஞர்களை கைது செய்து முகாமுக்குக்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக சட்டப் பேரவையில் கைகலப்பு: இந்திராகாங்கிரஸ்உறுப்பினர் செல்வகுமார் மீது தாக்குதல்!

(சென்னை)
தமிழக சட்டப்பேரவையில் அரச ஊழலை நிரூபிப்பதாகக் கூறி ஆதாரம் கொடுக்கப் போன இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு.செல்வகுமார் நேற்று அவையிலேயே தாக்கப்பட்டார்.

அவரைத்தாக்கியசுயேட்சை உறுப்பினர் தாமரைக்கனியை நோக்கி காங்கிரஸ் உறுப்பினர்கள் விரைந்தபோது பேரவை காவலர்களால் அவர் பாதுகாப்புடன் வெளியே அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த வன்முறையை ஆட்சேபிக்கும் வகையில் விரைந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் நான்கு பேர் பலவந்தமாக சபையிலிருந்து வெளியேற்றப் பட்டனர். இதை ஆட்சேபித்து காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

(4ம் பக்கம் பார்க்க)

### திட்டமிட்டே தாக்கப்பட்டார்!

(சென்னை)
இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் செல்வகுமார் திட்டமிட்டே தாக்கப்பட்டதாக அக்கட்சியின் மூத்த உறுப்பினர் திரு. குமரி அனந்தன் தெரிவித்துள்ளார்.

இம்சம்பவம் குறித்து முதல்வர் ஜெயலலிதா வருத்தமோ கண்டனமோ தெரிவிக்காதது தமக்கு வியப்

(4ம் பக்கம் பார்க்க)

### தாமரைகனி சபையிலிருந்து ஒருவாரம் இடைநிறுத்தம்

(சென்னை)
தமிழக சட்டப்பேரவையிலிருந்து சுயேட்சை உறுப்பினர் தாமரைக்கனி ஒரு வாரகாலம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் செல்வக்குமாரை தாக்கியதற்காகவே அவர் வெளியேற்றப்பட்டார்.

மற்றும் சட்டப் பேரவை

(4ம் பக்கம் பார்க்க)

## 1992 டிசம்பர் க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்

(கொழும்பு)
கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சை முடிவுகள் இன்று செவ்வாய்க்கிழமை வெளியாகும் என அறிவிக்

(4ம் பக்கம் பார்க்க)

## 690 மாணவர்கள் 8 பாடங்களிலும் அதிவிசேட சித்தி

(கொழும்பு)
இன்று வெளியாகியுள்ள க. பொ. த. (சாதாரணதர) முடிவுகளின்படி க. பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி பயில 78ஆயிரத்து 505 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (உயர்தர) பரீட்சை: விண்ணப்பங்களை உடன் அனுப்புமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)
கல்விப் பொதுத் தராதர (உயர்தர) ஆகஸ்ட் 1993 பரீட்சைக்கான பாடசாலை மாணவர்களது விண்ணப்ப பத்திரங்களை உடனடியாக பாடசாலை அதிபர்கள் பூர்த்தி

(4ம் பக்கம் பார்க்க)

## பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)
க. பொ. த. (சா/த). க. பொ. த. (உ/த) மற்றும் பொதுப்பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் (பாடசாலைப் பரீட்சார்த்திகள் உட்பட) பரீட்சை எழு

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை, இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறுமெனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

## இன்று பரீட்சை

(யாழ்ப்பாணம்)
அன்னை பூபதி ஞாபகார்த்தப் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை, இன்று வட தமிழீழப் பகுதியில் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## 'சார்க்' மாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கை இந்திய தலைவர்களுக்கு குண்டு துளைக்காத கார்கள்

(டாக்கா)
பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள 'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள இலங்கை இந்தியத் தலைவர்களுக்கு பாதுகாப்பு காரணமாக குண்டு துளைக்காத கார்கள் வழங்கப்படும்.

இங்கு வரும் இந்திய பிரதமர் பி. வி நரசிம்மராவுக்கு எதிராக மறியல் பேரணி ஒன்று நடாத்தப் போவதாக முஸ்லிம் தீவிர அமைப்பு

(- 4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### தேவை

கொரிலிக்ஸ், விவா, போத்தல்கள் தேவை. நபரி மூடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd, No: 14, Seenier Lane, Jaffna. (A-2980)

### சேவை

ஸ்ரீ காந்தா அச்சகம் ஸ்ரீலங்கா அச்சக அதிபரின் மேற்பார்வையில் நடைபெறுவதால் உங்கள் அவசர தேவைகள் எதுவானாலும் அழகுற செய்து கொள்வதற்கு நாடுங்கள். ஸ்ரீகாந்தாஅச்சக லேன்-யாழ்ப்பாணம். (எ-2965)

### பாலாஜி புத்தகசாலை

பிறந்தநாள் வாழ்த்துமடல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். 16, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (எ-2993)

புலமைப்பரிசில் பரீட்சை ஆண்டு 5க்கான கணிதம், தமிழ், 40 மாதிரி வினாத்தாள்களும், விடைகளும், 1988, 89, 90, 91, 92 வினாத்தாள்கள் உள்ளடக்கப்பட்டன. விலை ரூபா 130/-, பாலாஜி புத்தகசாலை, 16, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (எ-2992)

### மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம்சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சுயந்திரசாலை, கொக்குவில். (எ-3000)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலைபிடி, தலைகாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். (வேலணை வைத்தியர் கி.இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (கி-7297)

### சைக்கிள் விற்பனைக்கு

"றலி" உதிரிப்பாகங்களுடன் கூடிய நல்ல நிலையிலுள்ள 'றலி' சைக்கிள் விற்பனைக்குண்டு 3-4-93 வரை நாவலர்மடம் பாடசாலை எதிரில், பிரதான வீதி, கரவெட்டி. (சி 4043)

### கல்வி

G.C.E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை, 26 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். மற்றும் A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லேரகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி 4037)

### MATHS

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து G. C. E. (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை, 26 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறுடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லேரகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி 4038)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப்போட்டியின் இன்றைய ஆட்டம் வருமாறு:

சென். அன்ரனிஸ் எதிர் பொற்பதி (கொக்குவில்) விநாயகர் (மயிலாகம்) வி. க. எதிர் சென்லூட்ஸ் (க). (59)

## ஒரே வீட்டில் இரு சைக்கிள் திருட்டு

(உடுவில்)

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து இணுவிலில் வசித்து வந்த அளவெட்டி வாசியான ஜெயக்குமார் என்பவருடைய இரண்டு புதிய சைக்கிள்கள் அண்மையில் திருடப்பட்டுள்ளது.

சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான இச் சைக்கிள்கள் அவரின் வீட்டு பின்புற விறாந்தையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோது இரவு வேளையில்திருடப்பட்டுள்ளது. (109)

## இசை பயிற்சி வகுப்புக்கள்

★ ஓகன் - ORGAN
★ கிற்ரூர் - GUITAR
★ றம்ஸ் - DRUM'S
★ தபேலா - THAPELA

பயிற்சிகள் ஆரம்பம்: 03-04-1993

சனி, ஞாயிறு வகுப்புக்கள் மட்டும் நடைபெறும்.

விபரங்கட்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

52/1, STANLEY ROAD, JAFFNA.

(றெயில்வே கடவை அருகாமை, மேல்மாடி)

(எ-3002)

## இராசி பலன்

30-03-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு பங்குனி 17)

ஸப்தமி பி. ப. 3-29 வரை மிருகசீரிடம் மு. ப. 11-22 வரை சித்தயோகம், இராகு காலம் மாலை 3-13 முதல் 4-43 வரை சுபநேரம் காலை 10-43 12-43 வரை.

மேடம்: கௌரவம், புதிய சிந்தனை, செல்வந்தர் ஆதரவு

இடபம்: பிறரால் ஏமாற்றப்படல், வீட்டில் கருத்து மோதல், செலவு.

மிதுனம்: புதிய ஸ்தானம், தொழில் மேன்மை, பிரயாண நன்மை.

கடகம்: தாழ்வுமனநிலை, வயிற்றுவலி, குடும்பயோசனை

சிம்மம்: தேக. சௌக்கியம், ஆசை நிறைவேறுதல், தனலாபம்.

கன்னி: மனதைரியம், முயற்சி பலிதம், தொழில் கௌரவம்.

துலாம்: எதிர்பாராத துன்பம், அநாவசிய தலையீடு, உடல்சுமை.

விருச்சிகம்: குடும்பபிரிவு, காரியதடை, மனக்கலக்கம்.

தனுசு: பந்துக்கள் சகாயம், மனச்சந்தோசம், அதிக பிரசங்கம்

மகரம்: மனைவியால் புகழ், இனிய சந்திப்பு, கல்வியால் மேன்மை.

கும்பம்: செய்தொழில்பாதுகாப்பு, தனவிரயம் ஏமாற்றம்,

மீனம் வீண்பயம், குடும்ப யோசனை, பழைய நினைவுகள்

ஜோஸ்யர்.

## இன்று

(உடுவில்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு ஸ்ரீ அங்குசபாச பிள்ளையார் கோவில் (கீரிப்பிள்ளையார், மணவாளகோல வருஷாபிஷேக திருவிழாவும் அஷ்டோத்திரசத சங்காபிஷேகமும் இன்றுசெவ்வாய்க்கிழமை பகல் நடைபெற உள்ளது மாலை விநாயக பெருமான் தெருவீதி உலா வருவதுடன் உபந்நியாசம், இசைக்கச்சேரி, வீணாகானம், வில்லிசை ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறும். (109)

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை 'யுனிசெப்' நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டுள்ள நகர்ப்புற அடிப்படை சேவைகள் நிகழ்ச்சியின் திட்டத்தின் கீழ் இன்று செவ்வாய்க்கிழமை காலை9 மணிக்கு யாழ் நாவலர் கலாச்சார மண்டபத்தில் பனம் பொருள் கைப்பணித்திட்டக்கண்காட்சி விற்பனையையும் சுகாதாரக் கண்காட்சியையும் ஆரம்பித்து வைக்கவுள்ளது.

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ பாலசிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளது. சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் இக்கண்காட்சி விற்பனையை ஒழுங்கு செய்துள்ளார். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் கடந்த 4 மாதங்களுக்கு மேலாக நடாத்தப்பட்ட பயிற்சியின் போது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியும், விற்பனையும் இன்றும் நாளையும் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் சுகாதாரம் சம்பந்தப்பட்ட சுவரொட்டிகளும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறவிருக்கும் ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினர்களாக பனை அபிவிருத்தி திணைக்கள பொது முகாமையாளரும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளரும் கலந்துகொள்ளவுள்ளனர். (59)

## திருக்குறள் பேச்சு கட்டுரைப் போட்டி

(உடுவில்)

தமிழீழ திருவள்ளுவர் மன்றம் பாடசாலை மாணவர்களிடையே திருக்குறள், மனனம், பேச்சு, கட்டுரை எழுதல் போட்டிகளை நடாத்தி பரிசுகளை வழங்க உள்ளது.

கீழ்ப்பிரிவு 4,5, ஆண்டுகள்) நடுப்பிரிவு 6,7 8 ஆண்டுகள்) மேற்பிரிவு (9, 10, 11 ஆண்டுகள்) அதிமேற்பிரிவு (ஆண்டு 12, 13) என நான்குபிரிவுகளாக போட்டிகள் நடைபெறும்.

அதிகளவில் திருக்குறளை மனனம் செய்து ஒப்புவிப்பவருக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும். பரிசுகள் யாவும் வள்ளுவர்விழா கொண்டாட்டத்தின்று வழங்கப்படும்.

ஏப்ரல்மாதம் 19, 20ம் திகதிகளில் மனன போட்டிகளும், ஏப்ரல் மாதம் 23ம் திகதி கட்டுரைப் போட்டியும் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நடைபெறும். (109)

## யானைகள் தொகை குறைந்து வருகிறது

(கொழும்பு)

இலங்கையில் யானைகளின் தொகை குறைந்து வருகிறது. வன பாதுகாப்புத்துறை அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்நாட்டின் பலபகுதிகளில் வன்முறைகள் இடம்பெற்றுவருவதால் காட்டுப்பகுதிகளுக்கு எம்மால் செல்லமுடியாதிருக்கிறது.

யால, வில்பத்து போன்றபகுதிகளுக்கு செல்லமுடியாதிருப்பதால் அங்குள்ள யானைகளுக்கு என்ன நடக்கிறது என்பதையே எம்மால் அறிந்துகொள்ள முடியாதிருக்கிறது என்றனர். (இ)

## 31ம் திகதிக்கு முன் செலுத்தினால் 10 வீத வரிக்கழிவு வழங்க முடிவு

(திருநெல்வேலி)

யாழ். மாநகரசபையினால் அறவிடப்படும் வரிகளை இம்மாதம் 31-ந் திகதிக்கு முன்னர் செலுத்துபவர்களுக்கு 10 வீத வரிக்கழிவு வழங்கப்படவுள்ளது.

இவ்வரி அதிகரிப்பினை ஆட்சேபித்து கடிதம் அனுப்புபவர்களின் கடிதப்பிரகாரம் அவர்களை நேரில் அழைத்து அரசாங்க விலைமதிப்பீட்டாளர் சமூகத்தில் பரிசீலனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விசாரணைகளின்பின் வரி குறைக்கப்படும் பட்சத்தில் அதற்கேற்ப கணக்குகள் சரி செய்யப்பட்டு மேலதிகமாக செலுத்திய தொகை அடுத்த காலப் பகுதிக்கு வரவு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நெருக்கடி மிகுந்த இக்காலகட்டத்தில் தனது சேவைகளை வழங்கும் மாநகர சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் மக்களுக்கு நியாயமான நிவாரணம் வழங்கப்படும் என்றும் யாழ். மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (157)

## புலோலியில் 7,74,000 ரூபா விவசாய கடன் வழங்கப்பட்டது

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு பகுதியில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வரும் 42 விவசாயிகளுக்கு பருத்தித்துறை இலங்கை வங்கி பருவகால விவசாயக் கடனாக 7,74,000 ரூபாவை வழங்கி விவசாயிகளை ஊக்குவித்துள்ளது.

இவ்விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை பருத்தித்துறை இலங்கைவங்கி கடன் வழங்கு அதிகாரிகளான திரு. எஸ். சிவநாதன், திரு. இ. பஞ்சலிங்கம் ஆசிரியோர் நேரிற் சென்று பார்வையிட்டனர்.

இதனையடுத்து விவசாயிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று விவசாயிகள் சங்கத் தலைவர் ஆ. வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்றது. -52

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

மண்டலம் சுப்பிரமணியம்

(நியூ பிரகாஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்)

மலர்வு: 10-10-1911

உதிர்வு: 10-04-1992

திதி: 30-03-1993

அன்பால், பண்பால், அறிவால் எங்களை வழி நடத்திய அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

''குமரபதி'', கரவெட்டி.

(சி-4044)

நல்லூர் இளை நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# அரசியல் தீர்வுக்கான அவசியத்தை விளக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை மாகாணசபைத் தேர்தலின் நாட்டு மக்களுக்கு விளக்கிக்கூறுமாறு ஜனாதிபதி பிரேமதாசா ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்களைக் கேட்டுள்ளார்.

இனப்பிரச்சினையை தீர்க்கு முகமாக சகலரின் கருத்துக்களும் அறியப்பட்டுள்ளன. நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைத்ததும், அதன்படி அமைதி, சமாதானம் சகவாழ்வு ஏற்படும் விதத்தில் நிரந்தரமான தீர்வை ஏற்படுத்த அரசும் ஒரு தீர்வையே முன்வைக்கும். இதனை மாகாண சபைத் தேர்தலில் மக்களின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க வுள்ளோம்.

மாகாணசபைத் தேர்தலில், வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காண்பதற்கு மக்களுக்கு இதை உணர்த்த வேண்டும் என்றும், மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே. கட்சி பெறும் வெற்றி பொது மக்கள் பெறும் வெற்றியாக உறுதிப்படுத்தும் என்றும் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி எதிர்பார்த்திருக்கும் தெரிவுக்குழுவின் தீர்வை 7 தமிழ் கட்சிகள் முழுமையாக நிராகரித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சு.இ)

## பிரிட்டிஷ் தூதரக உதவி

(ஏழாலை)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ஸ்ரீ பாஸ்கரன், சங்கத்தின் விளையாட்டுக் கழகத்திற்கு உதவியளிக்குமாறு பிரிட்டிஷ் தூதராலய உதவி உத்தியோகத்தரிடம் கேட்டதற்கிணங்க அத்தூதரகம் ஓர் கிரிக்கெற் ஆடுகள உருவையையும் பயிற்சிக்கான பத்து லொஸ்ரோ இவ உதைபந்துகளையும் போட்டிக்கான ஐந்து மிகாச இன உதைபந்துகளையும் வாங்குவதற்கான நிதியை கொழும்பு டயாஜ அன் கொம்பனிக்கு அனுப்பியுள்ளது.

இரு வருடங்களுக்கு முன் இதே தூதரகம் கிரிக்கெற் விளையாட்டு உபகரணங்களைப் பெருமளவில் கொடுத்து உதவியதும் அதற்கு முன் கரப்பந்துகளையும் வலைப்பந்துகளையும் கொடுத்து உதவியதும் குறிப்பிடத்தக்கது. -16

# இராணுவ அட்டூழியங்களை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துக

## இந்துக் குருமார் ஒன்றியம் மகஜர்

(உடுவில்)

மக்கள் போக்குவரத்திற்காக பூநகரி இராணுவ முகாமை அகற்றி, பூநகரி-சங்குப்பிட்டி பாதையை திறந்துவிடுமாறும், பொருளாதார நெருக்கடியில் வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு போதியளவு உணவுப் பொருட்களையும், மருந்துகளையும் அனுப்பிவைக்குமாறும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை இந்துமத குருமார் ஒன்றியம் மகஜர் மூலம் கேட்டுள்ளது.

இந்து மதகுருமார் ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் வை. கருணாகரேஸ்வரக் குருக்களினால் கையொப்பமிடப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அம் மகஜரில் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசினால் யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் மீது தேவையற்ற விதத்தில் திணிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்றுவரும் இராணுவ அட்டூழியங்களை உடன் நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணக்கமான தீர்வொன்றைக் காண முன்வாருங்கள். வரலாற்றுப் பெருமை மிக்க கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், திருக்கேதீஸ்வர ஆலயம் ஆகிய புனித இடங்களில் அமைந்திருக்கும் இராணுவ முகாம்களை அகற்றி மக்கள் சுதந்திரமாக வழிபாடு செய்ய அனுமதியுங்கள். (109-இ)

## திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்திற்கு திட்டமிடல் உதவிப் பணிப்பாளராக திருமதி நா. சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் யாழ். அரசாங்க செயலக திட்டமிடல் பிரிவில் கடமையாற்றி வந்தவராவார். (72)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

இலங்கைநிர்வாகசேவைக்கு ஆட்சேர்க்குமுகமாக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப்பரீட்சைக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி 30-04-93 வரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ)

# யாழ். பொது நூலகத்தை திருத்த நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர பொதுநூலகத்தை புனரமைப்பதற்கு முப்பத்தைந்து லட்சம் ரூபா பெறுமதியான கட்டிடப் பொருட்களை கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவருவதற்கு யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளருக்கு ஜனாதிபதி பிரேமதாசா அனுமதி வழங்கியுள்ளார்.

மாநகர ஆணையாளர் கடந்த அக்டோபர் மாதம் இதற்கான வேண்டுகோளை விடுத்திருந்தார்.

அனுமதிக்கப்பட்ட பொருட்களில் 500 பக்கற் சீமெந்து, 200 தொன் பெயின்ட், 250 தொன் இரும்புக்கம்பி உட்பட பல பொருட்கள் அடங்கியுள்ளன. இது குறித்து கொழும்பிலுள்ள அதிகாரிகளும் கலந்தாலோசித்து பொருட்களை எடுத்துவருவதற்கான முயற்சியில் ஆணையாளர் விரைவில் கொழும்பு செல்லவுள்ளார். (எஸ்-இ)

## தையல் கண்காட்சி

(உடுவில்)

போரூம் நிறுவனத்தின் ஆதரவுடன் சுளிபுரம் போரூட் நிறுவன அலுவலகத்தில் போஷாக்கு தையல் கண்காட்சியொன்றும் பரிசளிப்பும் அண்மையில் நடைபெற்றது.

திட்ட இணைப்பாளர் திரு. கணேசலிங்கம் கண்காட்சி நிலையத்தை திறந்து வைத்தார். (109)

# இந்திய ஜனாதிபதி இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம்செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனுராதபுரம்மிகிந்தலையில் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் கம் உதாவ கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதற்காக அவர் இலங்கை வர இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (இ)

## எமது கட்சி இனவாதம் அற்ற ஒரே கட்சி

### - விக்கிரமபாகு கருணாரத்ன

(கொழும்பு)

இந்நாட்டில் இனவாதம் இன்றி இயங்கும் ஒரே ஒரு அரசியல்கட்சி நவசமாஜக் கட்சியாகும்.

இவ்வாறு நவசமாஜக்கட்சி பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

ஏனைய கட்சிகள் சிங்களக் கட்சிகளாயினும், தமிழ்க் கட்சிகளாயினும் அவை இனவாதம் பேசியே அரசியல் நடத்துகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## செல்வா பிறந்ததின ஆராதனை

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின்பிறந்த தினத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு சுண்டிக்குளி புனித பரியோவான் தேவாலயத்தில் ஆராதனை நடைபெறவுள்ளது.

இந்த ஆராதனையில் கத்தோலிக்க திருச்சபையின் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் வண. பிதா. இம்மானுவேல் அடிகளார் அருளுரை வழங்குவார். தென். இந்திய திருச்சபையின் யாழ். ஆயர் அதி வண. ஜே அம்பலவாணர் தந்தை செல்வாவின் வாழ்க்கைக்கு சாட்சியகருவார்.

இந்த நிகழ்வுகளை யாழ் ஐக்கிய கிறிஸ்தவ சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (கி)

## நல்லைக் குருமணியின் குருபூசை இன்று

(கொம்புத்துறை)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்ரீலஸ்ரீ நல்லைக்குருமணி அவர்களது 12-வது ஆண்டு ஆராதனை விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை எட்டு மணி முதல் இரவு 8 மணி வரை குருமகாசந்நிதான ஆலய மண்டபத்திலும் ஆதீன கலா மண்டபத்திலும் இடம்பெறும்.

காலை 8 00 மணிக்கு யாகபூஜை விஷேசஹோமமும், 11.00 மணிக்கு சங்காபிஷேகமும், விசேஷபூசை, பஞ்சமுகார்ச்சனை, திருமுறை அர்ச்சனை, வேதபாராயணம், திருமுறைபாராயணம் ஆகியனவும் நண்பகல் 12மணிக்கு அன்னதானமும், பிற்பகல் 2-00 மணிக்கு பெரியபுராண படனமும், மாலை 3.00 மணி முதல் இசை அரங்கு, மங்கள இசை ஆகியனவும் நடைபெறும்.

பிற்பகல் 4 00 மணிக்கு கவிஞர் நா. பரமசாமி எழுதிய ''நல்லைக்குருமணியின் வாழ்க்கை வரலாறு'' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறும். -154

# சுக வாழ்வு பற்றிய தொடர் விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் சார்பில், பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த மருத்துவப் பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், யாழ். போதனாவைத்தியசாலை மருத்துவநிபுணர்கள் இணைந்து சுகவாழ்வு பற்றி 20க்கு மேற்பட்ட விரிவுரையினைத் தொடராக வழங்கவுள்ளார்கள்.

3-4-1993 முதல் 5-5-1993 வரை பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9 முதல் 12 மணிவரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் விரிவுரைகள் இடம்பெறவுள்ளன.

10 வாரங்கள் 10 அமர்வுகளாக இடம்பெறவுள்ள இப்பொது விரிவுரைத் தொடரில் ஒவ்வொரு அமர்விலும் இரு விரிவுரைகளும் அவற்றைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள பொதுமக்களும், சுகாதார பணியாளர்களும், பல்கலைக்கழக, பாடசாலைமாணவ மாணவிகளும் இப்பொது விரிவுரைத்தொடர்களுக்கு வந்து கலந்து பயன்பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது.

கலந்துரையாடல்களில் பங்குபற்றுனர்களாக பதிவுசெய்து கொள்பவர்களே கலந்து கொள்ளலாமாகையால் இந் நிகழ்வுக்கு வருகை தரவுள்ளவர்கள் புறநிலைப்படிப்புகள் அலகில் நேரிலோ, கடிதம் மூலமோ தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

## தவக்கால நற்சிந்தனை

''கடியுண்டவன் வெண்கலப்பாம்பை உற்று நோக்கினால் உயிர் பிழைப்பான்'' (எண் 21:8) இது இறைமகன் கிறீஸ்து சிலுவையில் உயர்த்தப்படுவார் என்பதற்கு ஒரு முன்னுதாரணமாகும். அன்று பாம்பினால் கடியுண்டவர்கள் வெண்கலப்பாம்பை உற்று நோக்கியதும் குணமடைந்தார்கள். இதேபோன்று சிலுவையின் வழியாய் நமக்கும் வாழ்வு கிடைக்கும் என்பதற்கு இது ஒப்பாகும். யேசுவின் சிலுவையை ஏறிட்டு நோக்குவோம். சிந்திப்போம். சிலுவையின் வழிபால் சீவியம் பெறுவோம்.

மோ. தா.

# கம்யூனிச அதிரடிப் புரட்சி ரஷ்யாவில் மீண்டும் தவிர்ப்பு

(மாஸ்கோ)

ரஷ்யாவில் மீண்டும் ஒரு கம்யூனிஸ அதிரடிப் புரட்சி தவிர்க்கப்பட்டுள்ளதாக ரஷ்ய அதிபர் திரு. பொறிஸ் ஜெல்சின் கூறியுள்ளார்.

ரஷ்ய அதிபர் சட்டத்திற்கு புறம்பான விதத்தில் ஜனாதிபதி ஆட்சியை பிரகடனப் படுத்தியதற்கு எதிராக ஜெல்சின்மீது விசாரணை நடத்தப்படவேண்டுமா என்பது குறித்து ரஷ்ய காங்கிரஸ் சபையில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் வெற்றுபெற்ற பின் உரையாற்றுகையிலேயே திரு ஜெல்சின் மேற்கண்டவாறு கூறினார்.

ஜெல்சின்மீது வழக்கு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்ற நிலையில் இரகசிய வாக்கெடுப்பில் 70 வாக்குகள் குறைந்ததால் இத்தீர்மானம் தோல்வியடைந்தது.

இதேபோன்றே ரஷ்ய பிரதமருக்கு எதிராக கொண்டு வந்த இரகசிய வாக்கெடுப்பும்

# ஜெயலலிதா மீதான மனு தேர்தல் கமிஷனுக்கு அனுப்பிவைப்பு

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சட்டப்பேரவை உறுப்பினர் பதவி வகிக்க தகுதியற்றவர் எனக்கோரும் மனு தமிழக ஆளுநரால் தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தமிழக அட்டோர்னி ஜெனரல் திரு. மூலாயன் பானர்ஜி சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

இந்த மனு ஜனதாக்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியால் சுமார் இரு வாரங்களுக்கு முன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-இ)

## தமிழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் அமைச்சர் செல்வகணபதி பேசிக்கொண்டிருந்தபோது நடந்தது. சென்னைக்கு அருகே அரசுக்கு சொந்தமான ஓட்டலைத் தனியார் நிறுவனமொன்று ஆக்கிரமித்து விட்டதாக காங்கிரஸ் உறுப்பினர் செல்வகுமார் கூறிய குற்றச்சாட்டு தொடர்பாக அவர் ஆதார ஆவணங்களைச் சமர்ப்பிக்க முற்பட்டார்.

இதனை சபாநாயகர் பல தடவை தடுத்தார். இவ்வேளையில் யாரும் எதிர்பாராதவகையில் தாமரைக்கனி கைடக்கோடி இருக்கையிலிருந்து எழுந்து பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே நின்ற செல்வகுமார் மீது பாய்ந்து 'பளார்' என்று ஓர் அடிகொடுத்தார்.

இதனை சற்றும் எதிர்பாராத அவை பிரமித்து நின்றபோது காங்கிரஸ் உறுப்பினர்கள் தாமரைக்கனியை நோக்கி விரைந்தனர்.

எனினும் பேரவைக் காவலர்கள் தாமரைக் கனிக்கு பாதுகாப்பு கொடுத்து பத்திரமாக வெளியேற்றினர். காங்கிரஸ் உறுப்பினர்கள் பேரவை தலைவரின் இருக்கைக்கு முன்னால் கூச்சலிட்டனர். இதை முறையற்ற செயலாக கூறிய சேடப்பட்டி முத்தையா காங்கிரஸ் உறுப்பினர்களான நாளைவரை அவையிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டார். அவர்கள் மறுக்கவே அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.

இதையடுத்து பேரவைத் தலைவர் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தவறி விட்டதாகக்கூறி காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். (இ)


**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை**

**தலைமையலுவலகம் - நல்லூர் பிரிவு**

28-03-1993ல் இழுக்கப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டில் பரிசு பெற்ற சீட்டுக்களின் விபரம்;

| | | |
|---|---|---|
| 01. 2338 | 03. 4118 | 05. 4798 |
| 02. 2266 | 04. 4615 | |

பரிசுக்குரியவர்கள் 30-04-93 க்கு முன் நல்லூர்ப் பிரிவுப் பணிமனையில் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்துப் பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
29-03-1993. (ஏ-3005)



**பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 03-04-1993 முதல் 05-06-1993 வரை சனிக்கிழமை தோறும் நடைபெற இருக்கின்ற "சுகவாழ்வு" பொது விரிவுரைத் தொடரில் தவறாது பங்குபற்றும்படி சகல பாலர் பாடசாலை ஆசிரியைகளையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு திரு. இரா. சிவச்சந்திரன், (இணைப்பாளர், புறநிலைப்படிப்புகள் அலகு, யாழ். பல்கலைக்கழகம்) அவர்களோடு தொடர்பு கொள்ளவும்.

சுந்தரம் டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

29-03-1993. (எ-3007)


## உதவி வழங்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வருடம் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் குறித்து இங்கு ஆராய்ந்த பிறகே குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## தாமரைக்கனி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களான திரு. ஞானசேகரன் திரு. ரங்கநாதன் ஆகியோர் நிதி மசோதா விவாதம் முடியும் வரையிலும் பேரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டாம் என பேரவை தலைவரால் இடைநிறுத்தப் பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களான திரு. புரட்சிமணி, திரு. ஜானகி ராமன் ஆகியோரையும் சபையிலிருந்து வெளியேறுமாறு பேரவை தலைவர் உத்தரவிட்டார். (கு.க.சி)

# ● யாழ். பல்கலை மாணவர் கொழும்பு மாணவர்க்கு ஆதரவு தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீட மாணவர்கள் நடத்திவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கு முகமாக யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்பைச் சேர்ந்த மாணவர் பிரதிகள் குழு ஒன்று நேற்று கொழும்பு வந்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

தமது போராட்டத்துக்கு யாழ். பல்கலைக் கழகமும் ஆதரவு தெரிவித்திருப்பதாக அனைத்து இலங்கை பல்கலைக் கழகமாணவர் அமைப்பு பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு ஆதரவு தெரிவிக்கு முகமாக யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று மாணவர்களும் ஒரு மாணவியும் கொழும்பு வந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ)

## க. பொ. த. உயர்தர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து யாழ் கல்வித்திணைக்களத்தில் ஒப்படைக்கும்படி கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விண்ணப்ப படிவங்களை சேகரித்து கப்பல் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத்திகதி இம்மாதம் 31ம் திகதி என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (157-இ)

## சார்க்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று அறிவித்துள்ளது தெரிந்ததே.

பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக 3000 விசேட பயிற்சி பெற்ற அதிரடி பொலிசாரை நியமிக்கவும் பங்களாதேஷ் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## 690 மாணவர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களும் 690 மாணவர்கள் எட்டு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளார்கள்.

17 3 சதவீதமான மாணவர்கள் க. பொ. த. உயர்தர வகுப்பில் கல்விபயில தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த வருடத்தைவிட இது 2 2 சதவீதம் அதிகம் என தெரிவிக்கப்பட்டது. (இ)

## வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்காப் படையினரின் இந்நடவடிக்கையினால் இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் அவர்கள் பயத்துடனேயே தமது பொழுதைக்கழித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## புலிகளுக்கு எதிரான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறில் ரணதுங்க, பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்து வந்த காலம் முழுவதும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொண்ட இராணுவநடவடிக்கைகளுக்கு கூடுதலாக தடையாகவே செயற்பட்டு வந்துள்ளார் என்று அந்தப் பத்திரிகை மேலும் குற்றம் சாட்டியுள்ளது.

திரு. சிறில் ரணதுங்க தற்போது, அவுஸ்திரேலியா தூதுவராக நியமிக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (வி-சி)

## திட்டமிட்டே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக இருப்பதாக அவர் பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டு தாக்கப்பட்டது இது இரண்டாவது முறை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கான அவசர கூட்டம் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது. (க-கி)

## குமாரி நேற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர விருந்த குமாரி கப்பலில் வந்த உணவுப் பொருட்களை பொறுப்பேற்கச் சென்ற யாழ். செயலக அதிகாரிகள் இக்கப்பல் மாலை வரை பருத்தித்துறைக்கு வராததினால் யாழ். திரும்பினார்கள்.

இக்கப்பலிலிருந்து எந்த ஒரு செய்தியும் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை என்றும் இக்கப்பல் இயந்திரக் கோளாறினால் அனேகமாக நடுக்கடலில் தரித்து நிற்கக் கூடுமென்றும் கூறப்படுகின்றது. (வி-இ)

## 1992 டிசம்பர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது. முடிவுகள் அனைத்தும் இன்று தபாலில் சேர்ப்பிக்கப்படும்.

பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் பாடசாலை அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் அவர்களது சொந்த விலாசங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

பரீட்சை ஆணையாளர் திரு. ஆரிவெதமுல்ல இதுபற்றி தெரிவிக்கையில் கொழும்பு நகர எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் தமது பாடசாலைகளின் பெறுபேறுகளை பரீட்சைத்திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

இந்தப்பரீட்சைக்கு 4 லட்சத்து 53 ஆயிரத்து 899 மாணவர்கள் தோற்றினார்கள். (இ)

## பொதுப் பரீட்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் பொழுது தமது அடையாளத்தை நிரூபித்தல் அவசியமாகும் என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் பரீட்சார்த்திகள் கவனத்திற்கு அறிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது: பரீட்சார்த்திகள் செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது தபால் திணைக்கள அடையாள அட்டை போன்ற பரீட்சை ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஒன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

இவற்றுள் எதுவும் கைவசம் இல்லாதவர்கள் தபால் அடையாள அட்டையையேனும் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கு முன்கூட்டியே விண்ணப்பித்து ஆவன செய்யும் வண்ணம் கேட்கப்படுகின்றனர்.

எக்காரணம் கொண்டும் நிழற்படப் பிரதிகள் உறுதிப்படுத்திக் கொடுக்கப்படமாட்டா என்பதனையும் கருத்தில் கொள்ளவும். (இ)


கல்வாரியில் ஒரு காவியம்

சாவிலும் ஒரு சரித்திரம் : இதோ!

உங்களை அழைக்கிறது ★

திருமறைக் கலா மன்றத்தின்

★★★ "பலிக்களம்" ★★★

பக்தி - இசை - உரை

நாடகம்

நேரம்: தினமும் மாலை 6-45
இடம்: மன்ற அரங்கு, யாழ்ப்பாணம்.
காலம்: 1, 2, 3, 4 சித்திரை, 1993.

(ஆசனப் பதிவு செய்துகொள்ளலாம்.)

(ஏ 3001)



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number B/10336/B